**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 1

Court I Additional District Court, Tiruvallur.

Name : Thiru.Subash Mahala

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 01 st day of August 2019.

**01/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 1 Thiru.Subash Mahala

**முதல் விசாரணை**

நான் சித்தி விநாயகா டுடிசபநள சிட்டி லிமிடெட் என்ற நிறவனத்தில் Area Manager Operation 2013ம் வருடத்தில் பணிபுரிந்தேன். January 2016ல் கம்பெனி மூடிவிட்டார்கள். 02.9.2014ந் தேதி Sterlite copper தூத்துகுடியிலிருந்து சில்வா குஜராத்திற்கு செல்வதற்காக டிரைலர் வண்டி எம் எச் 04 FU 6952 என்ற வாகனம் லோடு செய்யப்பட்டது. அந்த வாகனத்தில் ஜீ பி எஸ் பொருத்தபட்டது. ஜி எப் எஸ் பொருத்தபட்ட வாகனம் என்பதால் குறிப்பிட்ட வழியிலிருந்து மாறுபட்டுள்ளது அதை குறித்த தகவலை Software வேலை மூலமாக கம்பெனியில் தெரியும். 3.9.2014ந் தேதியன்று ஜி எப் எஸ் ஆப் ஆனது தெரியவந்தது. எனக்கு இரவு 9.00 மணிக்கு ஆப் ஆன தகவல் தெரியவந்தது. மறுநாள் நான் வாகனத்தின் ஓட்டுநருக்கு தொடர்பு கொள்ள முயற்சி செய்தோம். அப்போது, டிரைவரின் கைபேசி சுவிட்சு ஆப் செய்யபட்டிருந்தது. 04.9.2014ந் தேதி மாலை 8 மணி முதல் 9 மணி வரை டிரைவர்எங்கள் அலவலகத்திற்கு போன் செய்தார். டிரைவரின் பெயர் சவுக்தலி. பின்பு ஜி எப் எஸ்ஸில் பார்க்கும்போது வண்டி இராமபுரத்தில் ஒரு குடோனில் இருந்ததாக காண்பித்தது. டிரைவர் வண்டியை காணவில்லையென்று சொன்னதின் பேரில் தேடி கண்டுபிடித்தோம். 5ந் தேதி ராயல் நகர் போலிசு ஸ்டேஷனில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டபடும் புகார் அசாஆ 1 ஆகும். 2ம் தேதியன்று காப்பர்சீல்டு 64 காப்பர் சீட்டுக்கள் 24 டன் எடையுள்ளது 2ம் தேதியன்று வாகனத்தில் ஏற்றினோம். 5ம் தேதி டிரைவர் சென்னையில் வந்து என்னிடம் அவரை ஆர் டி ஓ வண்டி என்று பேப்பர் கேட்டதாகவும், அதை கொடுக்க அவர் போனபோது, அவரை டாடா சுமோவில்

தள்ளிவிட்டதாகவும், சிறிது தூரம் போய்விட்டு ஒரு இண்டிகா வண்டியில் ஏற்றியதாகவும், அதன்பின்பு 2 மற்றும் 3நாட்களுக்கு சுற்றிவிட்டு வாகனம் Farm House ல் மோட்டார் பம்பு ரூமில் வைத்துவிட்டு, பின்பு ஓசூர் போகும் ரோட்டில் இறக்கிவிட்டு கையில் ரூ.800 கொடுத்து பெங்களூர் செல்லுமாறு சொல்லிவிட்டார்கள் என்று என்னிடம் சொன்னார். அதன்பின்பு, அவர் அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டு என்னிடம் பேசியபோது மேற்படி விபரத்தை எனக்கு சொன்னார். மேற்படி காப்பர் மதிப்பு ரூபாய் ஒரு கோடியே இருபது லட்சமாகும். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் 3, எ4, எ7, எ11 தரப்பில் குறுக்கு விசாரணை**

4ம் தேதி டிரைவர் சொல்லி தான் வண்டி காணாமல் போன விபரம் எனக்கு தெரியும் என்றால் வண்டி காணாமல் போனது டிரைவர் சொல்லி தான் தெரியும். ஆனால், ஜி.பி.எஸ் அணைக்கபட்ட விபரம் 3ம் தேதியே தெரியும். எங்கள் கம்பெனியில் தமிழ்நாடு முழுவதும் பல ஏஜெண்ட்டுகள் இருக்கிறார்கள் என்றால் சரியல்ல. ஏஜெண்ட்டுகள் யாரும் இல்லை. 3ம் தேதி வண்டியின் ஜி பி எஸ் ஆப் ஆகிவிட்டது என்றும், டிரைவர் போன் சுவிட்சு ஆப் செய்யபட்ட விபரம் தெரிந்தவுடன் அது சம்பந்தமாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் புகார் கொடுக்கவில்லை. ஜி.பி.எஸ் மூலமாக வாகனம் எங்குள்ளது என்ற விபரம் எங்கள் கம்பெனியின் இருக்கும் நபர்கள் மட்டும் தான் பார்க்கமுடியும் என்றால் சரிதான். 4ம் தேதியன்று மாலை ஜி.பி.எஸ்யின் படி வாகனம் இராமபுரத்தில் உள்ள ஒரு குடோனில் இருந்ததாக பார்த்தேன். 4ம் தேதி காவல்நிலையத்தில் புகார் ஏன் கொடுக்கவில்லையென்றால் தூத்துகுடியில் வண்டி லோடு ஏற்றி சென்றதால், அந்த அலுவலகத்திற்கு தகவல் சொன்னேன். காவல்நிலையத்தில் அருகில் இருக்கும் கம்பூயூட்டர் பிரவுசிங் சென்டரில் வைத்து புகாரை தயார் செய்து கொண்டு போனேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது என்றால் சரிதான். என் வண்டி காணவில்லையென்று தான் நான் புகார் கொடுத்தேன் என்றாலும் அதன் பின்னர் போலிசார் கேட்டு கொண்டதின் பேரில் அசாஆ 1 புகாரில் பின்னிட்டு தயாரித்து கொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

**9ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எம் எச் 04 யு 6752 என்ற வாகனத்திற்கும் இந்த வழக்கின் சம்பவத்திற்கு சம்பந்தம் இல்லையென்றால் சரிதான்.

**10 மற்றும் 12 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சித்தி விநாயாக ராஜீ சீட் நிறுவதனத்தில் மொத்தம் எத்தனை பேர் பணிபுரிகிறார் என்பது எனக்கு தெரியாது மாதவரம் கிளையில் தான் நான் ஏரியா மேனேஜராக பணிபுரிகிறேன். அந்த கிளையில் மொத்தம் ஆறு பேர்கள் பணிபுரிகிறார்கள். 02.09.2014ந் 03.09.2014, 04.09.2014ந் ஆகிய தினங்களில் ஆறு பேரும் பணிக்கு வந்தார்களா என்றால் அது தற்போது என்னால் சொல்லமுடியாது. வழக்கு பதிவு செய்த பின்பு மாதவரம் கிளைக்கு வந்து போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. போலிசு விசாரணையின் போது மாதவரம் கிளையில் எத்தனை நபர்கள் பணிபுரிந்தார்கள் என்ற விபரத்தை போலிசார் ன்னிடம் கேட்டார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் தூத்துகுடி சென்றதில்லை. நான் Sterlight Copper கம்பெனிக்கு சென்றதில்லை. 02.09.2014ந் தேதிக்கு முன்பாக ஓட்டுநர் சவுதலிகான் என்பவரை எனக்கு தெரியாது. முதன் முதலில் ஓட்டுநர் சவுதலிகான் என்பவரை 5ம் தேதி எனது அலுவலகத்தில் வைத்து தான் பார்த்தேன். சுவதலிகான் என்பவரை ஓட்டுநராக நியமித்தவர் யார் என்று எனக்கு தெரியாது. மேற்படி சவுதலிகான் என்பவரின் மாதவருமானம் எவ்வளவு என்ற எனக்கு தெரியாது. அவர் ஓட்டுநர் உரிமத்தை நான் பார்க்கவில்லையென்றால் காவல்நிலையத்தில் ஓட்டுநர் உரிமத்தை கொடுக்கும்போது தான் நான் பார்த்தேன். அதற்கு முன்பு நான் பார்க்கவில்லை. 02.09.2014ந் தேதியன்று புறப்பட்ட டிரையல் வண்டி எந்த இடத்தில் இருந்து Sterlight Copper கம்பெனிக்கு சென்றது என்பது எனக்கு தெரியாது. 02.09.2014, 03.09.2014, ம் தேதியன்று ஓட்டுநர் சவுதலிகான் என்பவரிடம் எத்தனை நபர்கள் பயணம் செய்தார்கள் என்ற விபரம்எனக்கு

தெரியாது என்றால் சரிதான். இந்த விபரங்களை போலிசு விசாரணையின் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. வாகனத்தில் ஜி பி எஸ் மூலமாக டிரேக் செய்வது தனியாக யாரும் நியமிக்கபடவில்லை. பணியில் இருக்க கூடிய நாங்கள் 6 பேரும் யார் வேண்டுமானாலும் அந்த பணியை செய்வோம். சாட்சி தற்போது Head Office லிருந்து Access கொடுக்கபட்டதால் தான் அந்த பணியாளரால் பார்க்கமுடியும் என்று சொல்கிறார். 3.9.2014தேதியன்று ஜி பி எஸ் ஆப் செய்யபட்டபோது தூத்துகுடி நிறுவனத்தில் இருக்கும் மேலாளர் அனுப் என்பவருக்கு தகவல் சொன்னேன். 3.9.2014ந் தேதியிலிருந்து டிரைலர் எவ்வளவு மதிப்புடைய பொருள் ஏற்றபட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 3.9.2014ந் தேதியன்று ஏற்றபட்டபோது சில்வாசா குஜராத்திற்கு செல்லும் என்ற விபரம் எனக்கு தெரியும். அதன் ஓட்டுநர் சவுதலிகான் என்பவர் 4ம் தேதியன்று இரவு 9.00 மணியளவில் போன் செய்தார். அவர் அலுவலகத்தில் Landline எண்ணிற்கு போன் செய்தார். டிரைவர் எந்த எண்ணிலிருந்து போன் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் டிரைவரிடம் 4.9.2014ந் தேதியன்று 3.00 மணிக்கு வாகனம் சென்னையில் இருப்பதாக தெரிந்துகொண்டதாகவும், அவரை புறப்பட்டு வருமாறு சொன்னேன் என்றால் சரியல்ல. 4ம் தேதியன்று இராமபுரத்தில் இரவு 8.00 மணிக்கு மேல் வாகனத்தை பார்த்தேன். என்னுடன் ஒரு பணிபுரியும் தரம்வேர்சிங் என்பவரும் என்னுடன் வந்தார். அந்த இடத்தில் இருக்கும் வாகனத்தை அலுவலகத்திற்கு கொண்டு வருவதற்கு நான் முயற்சி எதுவும் செய்யவில்லை. வண்டி வாகனத்தினுள் ஏறி பார்க்கவில்லை. வாகனம் இராமபுறத்தில் கண்டுபிடிக்கபட்ட விபரத்தை நான் நேரிடையாக சென்று தகவல் போலிசாரிடம் சொன்னேன். 04.09.2014ந் தேதி இரவு 10.00 மணிக்கு போலிசாரிடம் தகவல் தெரிவித்தேனா என்றால் இருக்கலாம். போலிசாரிடம் புகார் எழுதி கொடக்க சொல்லவில்லையென்பதால் நான் புகார் எழுதி கொடுக்கவில்லையென்றால் சரிதான். என்னுடன் காவல்நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு எங்கள் நிறுவனத்தில் பணிபுரியும் கண்பத்லால்வனி என்பவர் வந்தார். 5.9.2014ந் தேதியன்று காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தபின்பு 2 மற்றும் 3 மணிநேரத்திற்கு பின்பு ஓட்டுநர் சவுதலிகான் காவல்நிலையத்திற்கு வ்நதார். நேரம் குறிப்பிட்டு

தெரியவில்லை. எங்கள் மாதவரம் கிளையிலிருந்து தூத்துகுடி Sterlight கம்பெனிக்கு வாகனம் எதுவும் நாங்கள் அனுப்பியதில்லை. ளுவநசடபைாவ கம்பெனியலிருந்து Scrap பொருட்கள் வெளியில் எடுத்து செல்லும் விபரம் எனக்கு தெரியாது. sterlight கம்பெனியில் இரந்து Copper பொருட்கள் மற்ற மாநிலங்களுக்கு எடுத்து செல்லும்போது பல கொள்ளை சம்பவங்கள் நடந்துள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு சம்பவங்களில் வாகனம ஓட்டநரின் சம்பந்தபட்டு அது சம்பந்தமாக செய்தி தாளில் செய்தி வந்துள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. புகாரில் உள்ள விபரங்களை ஆங்கிலத்திலோ அல்லது இந்தியிலோ எனக்கு யாரேனும் படிக்க சொன்னார்களா என்றால் படித்து சொன்னார்கள். அந்த நபர் யார் என்று தெரியாது. போலிசாரிடமும் அந்த நபரின் விபரத்தை நான் சொல்லவில்லை. அசாஆ 1 புகாரில் உள்ள விபரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும், வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், வேறு நபர்களை காப்பாற்றுவதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1,2, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் வேறு தேதிக்கு மாற்றும்படி மனு அளிக்கபட்டது. இருப்பினும், வழக்கின் விசாரணை 28.6,2019ந் தேதியன்றே இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கபட்ட காரணத்தினாலும், மனுவில் கூறிய காரணங்கள் போதுமானவையல்ல என்ற காரணத்தினாலும், மனு நிராகரிக்கப்பட்டது.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 2

Court I Additional District Court, Tiruvallur.

Name : Thiru. சவுக்தலிகான்
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 01 st day of August 2019.

**01/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 2 Thiru. சவுக்தலிகான்

**முதல் விசாரணை**

( சாட்சி ராஜஸ்தான் நாகர் மாவட்டத்திலிருந்து வருவதாக சாட்சி தமிழ் பேச எழுத மற்றும் படிக்க தெரியவில்லையென்பதால், சாட்சியின் சாட்சியத்தை மொழீபெயர்ப்பதற்காக திருமதி தீபா என்பவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மேற்படி நபர் எபிஎஸ் வித்யாமந்தரி என்ற பள்ளிகூடத்தில் இந்தி ஆசிரியர் ஆக 2012 முதல் பணிபுரிந்து வருகிறார். அது சம்பந்தமாக பள்ளி கூட முதல்வர் படிக்கும் சான்றிதழ் நீ.மசா-ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படிநபர், மொழிப்பெயர்ப்பாளர் ஆக செயல்படுவதற்கு ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை. சாட்சியின் சாட்சியம் மொழிப்பெயர்ப்பாளரின் உதவியுடன் பதிவு செய்ய்ப்படுகிறது)

நான் 10 வகுப்பு வரை படித்திருக்கிறேன். நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். 2013 லிருந்து சித்தி விநாயகா கம்பெனியில் ஒரு ஆண்டுகாலம் ஓட்டுநராக பணிபுரிந்தேன். 02.09.2014ந் தேதியன்று Copper ஏற்றி கொண்டு வாகனத்தில் புறப்பட்டேன். Copper ஏற்றி கொண்டு வாகனத்தில் சில்வாசா செல்வதற்கு புறப்பட்டேன். நான் பின்பு சேலத்தில் வந்து சாப்பிட்டுவிட்டு, பின்பு மதுரைக்கு சென்றேன். மதுரையிலிருந்து 20 கிலோமீட்டர் தொலைவில் பின்பு வந்த Petrol பங்கில் தங்கிவிட்டேன். அங்கிருந்து புறப்பட்டு மறுநாள் காலை புறப்பட்டு Sales Tax அலுவலகத்திற்கு சென்று முத்திரை பெற்று, அங்கிருந்து புறப்பட்டேன். சுமார் 2 கிலோமீட்டார் தூரம் சென்றேன். அப்போது, ஒரு டாடா சுமா வந்தது. அந்த டாடா சுமோ வாகனத்திற்கு பின்புறத்தில் சிவப்பு நிறத்தில் ஆர்.டி.ஓ என்று எழுதபட்டிருந்தது. அந்த வண்டி என் வாகனத்தை மறித்து நிறுத்த சொன்னார்கள். ஒரு நபர் இறங்கி வந்து வாகனத்தின் ஆவணங்களில் எடுத்துமாறு செய்கை செய்தார். பின்பு நான் ஆவணங்களை எடுத்து கொண்டு சுமோ வாகனத்தில் கதவின் அருகில் போனேன். அங்கு ஒரு வெள்ளை சட்டையணிந்த ஒரு நபர் அமர்ந்து ஆவணத்தை கேட்டார். நான் அவரிடம் பேப்பரை கொடுக்கும்போது மற்றொரு நபர் காருக்குள் தள்ளிவிட்டார்.

என்னை 2 மற்றும் 3 அடிக்கு படுக்க வைத்து கத்தியை கழுத்தில் வைத்து ஒரு நபர் என்னை துணியை போட்டு அமுக்கிவிட்டார். பின்பு வாகனம் புறப்பட்டது. பின்பு என்னிடமிருந்த பணமும், மொபைல் போனையும் எடுத்து கொண்டார்கள். நீதிமன்றத்தில் இருக்க கூடிய பணம் தான். அது சாபொ 1 வரிசையாகும். பின்பு 2 கிலோமீட்டர் தூரம் சென்ற மாதிரி இருந்தது. மற்றொரு நபர் U Turn U Turn என்று சொன்னார். பின்பு, வாகனம் மாலை வரை சென்று கொண்டிருந்தது. என்னை டாடா சுமோவிலிருந்து இண்டிகா வாகனத்திற்கு மாற்றினார்கள். இரவு என்னை அழைத்து சென்று ஒரு விவசாய நிலத்தில் விட்டுவிட்டார்கள். அந்த இடத்தில் அந்தநபர்களும் என்னுடன் இருந்தார். மறுநாள் மாலை வரை என்னை அங்கேயே வைத்திருந்தார்கள். பின்பு, என்னை ஓசூருக்கு 2 மற்றும் 3 கிலோமீட்டருக்கு முன்பாக இறக்கிவிட்டார்கள். என்னுடைய பர்சை என்னிடம் கொடுத்தார்கள். அதில் ரூ1100 பணம் இருந்தது. என்னுடைய போனும் கொடுத்தார்கள். அதில் சிம் கார்டு இல்லை. அதன்பின்பு நான் ஓசூருக்கு சென்று அங்கிருந்து சென்னையில் இருக்கும்அலுவலகத்திற்கு போன்செய்தேன். நான் சுபாஷ் என்பவரிடம் நடந்த விபரம் முழுவதையும் சொன்னேன். சுபாஷ் என்பவர் ஒரு ஆளை அனுப்பி என்னை அழைத்து வந்தார். பின்பு சென்னைக்கு வந்து காவல்நிலையம் சென்றோம். என்னுடைய வாகனத்திற்கு என்ன ஆனது என்பது எனக்கு தெரியவில்லை. வலது புறம் இருக்கும் 1வது எதிரியை அடையாளம் காண்பித்து சாட்சி அவர் தான் காருக்குள் ஆர்டிஓவிற்கும் ஆவணம் கேட்டார் என்று கூறுகிறார். நீதிமன்றத்தில் இருக்க கூடிய 7வது எதிரியை அடையாளம் காட்டி சாட்சி அவர் தான் டாடா சுமோ வாகனத்தை ஓட்டியதாக சொல்கிறார். நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 11 மற்றும் 12 ம் எதிரியை அடையாளம் காட்டி சாட்சி அவர்கள் இருவரும் வாகனத்தின் இருந்ததாகவும், 12ம் எதிரி கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாகவும் அடையாளம் காட்டுகிறார். மொத்தம் 5 நபர்கள் இருந்தார்கள்,. அதில் ஒரு நபர் நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லையென்று சாட்சி சொல்கிறார். சுபாஷ் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யபட்டது. இரண்டு நாட்கள் காவல்நிலையத்திற்கு சென்றவந்தேன். பின்பு சி பி சி ஐ டி அலுவலகத்திற்கு சென்று வந்தேன். என்னிடம் காட்டபடும் குவிமுச 164ன் படி பதிவு செய்யபட்ட

வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த கையொப்பங்கள் மட்டும் அசாஆ2 வரிசையாகும். அது எங்கு வைத்து போட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டபடும் புகைபடங்கள் நான் ஓட்டி சென்ற லாரியின் புகைபடங்கள் ஆகும். கிரே கலர் ஆகும். அது சாபொ 2 வரிசையாகும். நீதிமன்றத்தில் இருக்கும் ஆர்டிஓ ஸ்டிக்கர் சாபொ 3 ஆகும். நீதிமன்றத்தில் இருக்க கூடிய கத்தி சாபொ 4 ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்க கூடிய துணியை தான் என் மீது போட்டார்கள். அந்த துணி சாபொ 5 ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்க கூடியது Weight measurement Slip ஆகும். அது அசாஆ 3 ஆகும். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>3,4,7 மற்றும் 11 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னுடைய ஓட்டுநர் உரிமத்தை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்ததது போல் நினைக்கிறேன்.சேலத்தில் நான் சாப்பிட்டு விட்டு மதுரையில் இருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் Petrol பங்கில் தங்கினேன். எனக்கு சுபாஷ்மஉறாலா என்பவரின் அலுவலகத்தின் தொலைபேசி எண் யார் கொடுத்தார்கள் என்றால் சென்னையின் அலுவலகம் எண் எனக்கு ஞாபகம் இருந்தது. நான் போன் செய்து சுபாஷ் என்பவருக்கு தகவல் சொன்னேன். 4ம் தேதியன்றே ஓசூரிலிருந்து சென்னை வந்துவிட்டேனா என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் சுபாஷ் என்பவருக்கு போன் செய்த தேதியன்று சென்னைக்கு போகவில்லை. மறுநாள் சுபர்ஷ் ஆளை அனுப்பி அழைத்து சென்றார். சபாஷ் என்பவரிடம் தொலைபேசியில் பேசியபோது வாகனம் கிடைத்துவிட்டது. நீ எங்கிருக்கிறாய் என்று அவர் என்னிடம் கேட்டார். குஜாரத்திலிருந்து தூத்துகுடிக்கு வந்தபோது வாகனத்தில் நான் மட்டும் தான் வந்தேன். டாடா சுமோ வாகனம் வெள்ளைநிறத்தில் இருந்தது. இண்டிகா வாகனத்தின் நிறம் எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தபோது இதே விபரங்களை தான் சொன்னேன். நான் காவல்நிலையம் சென்றபோது ஆஜர் எதிரிகள் காவல்நிலையத்தில் இருந்தார்கள் என்றால்சரியல்ல. போலிசார் என்னை இரண்டு நாளுக்கு ஒரு முறை விசாரித்தார்கள். காவல்நிலையத்தில் வைத்து விசாரணையின்

போது ஆஜர் எதிரிகளை போலிசார் என்னிடம் அடையாளம் காட்டினார்கள் என்றாலும், அதை வைத்து தான் நான் எதிரிகளை அடையாளம் காட்டினேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் எடுத்து கொண்ட பணத்தில் எத்தனை ரூபாய் 1000 எத்தனை 500 மற்றும் எத்தனை 100 ரூபாய் என்று நோட்டுக்கள் இருந்தது என்பது எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய கைபேசி எண்ணை நான் போலிசாரிடம் கொடுத்துள்ளேன். ஜி.பி.எஸ் வாகனத்தில் எண் பொருத்தபட்டீருக்கும் எண் தெரியுமா என்றால் பொதுவாக டேஸ் போர்ட்டிற்கு கீழே ஜி.பி.எஸ் இருக்கும். ஜி பி எஸ் கருவி டேஸ்போர்ட்டிற்கு கீழே பொருத்தபட்டிருக்கும் விபரம் எனக்கு தெரியும். நானும் மேலாளரும் சென்று தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். ஒசூர் காவல்நிலையத்தில் நான் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் நான் காவல்நிலையம் சென்றபோது என் புகாரை எடுத்து கொள்ள மாட்டார்கள் என்று சொல்லவிட்டார்கள். அந்த விபரத்தை போலிசு விசாரணயில் சிபிசிஐடி விசாரணையில் சொல்லிருக்கிறேன்.வாகனத்தில்ஜிபிஎஸ் இருக்கும் விபரம் எனக்கு மட்டும் தான் தெரியும் என்றாலும், அந்த ஜி பி எஸ் கழற்றிவிட்டு என்னுடைய ஆள்களை வைத்து வாகனத்தை கடத்தி உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், என்னை காப்பாற்றி கொள்வதற்காக மேலாளரிடம் சேர்ந்து வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>10 மற்றும் 12 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2002 மற்றும் 2003 முதல் நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். சித்திவிநாயக. சிதிவிநாயக லாஜிஸ்டேட் கம்பெனியில் ஓராண்டு காலம் ஓட்டுநராக பணிசெய்தேன். என்னுடைய மாத வருமானம் ரூ.5,500/ ஆகும். குஜாரத்திலிருந்து தூத்துகுடி வந்து குஜராத்திற்கு திரும்ப செல்லும்போது என்கடு அதே சம்பளம் தான் கொடுக்கப்படும். குஜராத்திலிருந்து தூத்துகுடி வருவதற்கு சுமார் ஆறுநாட்கள் ஆகும். அங்கிருந்து சில்வாசா செல்வதற்கு 1800 கிலோமீட்டர் ஆகும். காலில் எனக்கு பிரச்சனை உள்ளது. குழந்தையிலிருந்து எனக்கு காலில் பிரச்சனை இருந்து வருகிறது. சராசரி நபரை போல் என்னால் நடக்க முடியாது. எனக்கு வலி எதுவும் ஏற்படாது. இடது காலில்

பிரச்சனை உள்ளது. Heavy Vehicle அதற்கு ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ளேன். சம்பவத்திற்கு முன்பு நாளைந்து மாதங்களாக தூத்துகுடிக்கு வந்து சென்றேன். நான் ஓட்டி வந்த வாகனத்தில் ஏற்றபட்ட பொருட்களின் மதிப்பு எனக்க தெரியுமா என்றால் பில்லில் ஒரு கோடியே இருபது லட்சம் என்று குறிப்பிடபட்டுள்ளது. காவல்நிலையத்திற்கு சுபாஷ் என்பவரிடம் காலை 10.00 மணிக்குமேல் சென்றேன். ஒசுரிலிருந்து மறுநாள் வந்தேன். ஒசூரிலிருந்து வந்த மறுநாள் காவல்நிலையம் சென்றேன். நான் ஒசூரிலிருந்து பிசிஓ மூலமாக போன் செய்தேன். யாரிடமும் கைபேசியை வாங்கி நான் போன் செய்யவில்லை. சுபாஷ் என்பவர் போன் மூலுமாக என்னிடம் வாகனம் எந்த இடத்தில் இருந்து வாகனம் களவாடபட்டது என்ற விபரத்தை சொன்னேன். சுபாஷ் என்பவர் வாகனம் திருடி போன இடத்தை என்னை புகார் கொடுக்குமாறு சொல்லவில்லை. சுபாஷ் என்பவர் வண்டி கிடைத்தபிறகு என்னை புறப்பட்டு வருமாறு சொன்னார். எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. கையால் தான் அடித்தார்கள். என்னை சிபிசிஐடி போலிசார் வழக்கு சம்பந்தமாக 10 முறை விசாரித்தார்கள். சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து தான் என்னை 10 முறையும் விசாரித்தார்கள். என்னுடன் சுபாஷ் என்பவரையும் விசாரித்தார்கள். வேறு யாரை விசாரித்தாகள் என்பது எனக்கு தெரியவில்லை. நான் காவல்நிலையம் சென்றுபுகார் கொடுக்கும்போது வாகனம் அங்கு இல்லை. 2 மாதங்களுக்கு பின்பு வாகனத்தை மாதவரம் அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். மாதவரம் அலுவலகத்தில் வைத்து பார்ப்பதற்கு முன்பாக வாகனத்தில் வேறு எங்கும் பார்க்கவில்லையென்றால் சரிதான். வாகனத்தில் நான் பார்க்கும்போது அதில் சேதம் எதுவும் தென்படவில்லை. ரூபாய் 10,000 தை தூத்துகுடி அலுவலகத்தில் இருந்து மேலாளர் அமர்சிங் என்பவர் என்னிடம் கொடுத்தார். சம்பவத்திற்கு பின்பு சிபிசிஐடி போலிசார் சாபொ 4 கத்தியை என்னிடம் காண்பித்து விசாரணை எதுவும் செய்யவில்லை. சாபொ1 பணம், சாபொ 2 புகைபடங்கள், சாபொ5 டவல், சாபொ3 ஸ்டிக்கர் ஆகியவற்றை சிபிசிஐடி போலிசார் காண்பித்து என்னிடம் விசாரணை எதுவும் செய்யவில்லை. நான் கையொப்பம் செய்த 164 குவிமுச வாக்குமூலுத்தில் விபரங்கள் என்பது எனக்கு தெரியாது. அப்போது சுபாஷ் என்பவர் என்னிடம்சொன்னார். என்னிடம் காட்டபடும் அசாஆ2 வரிசையிலுள்ள

கையொப்பங்கள் சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து போட்டேன்என்றால் சரிதான். போலிசு விசாரணையின் போது ஆஜர் 12ம்எதிரி தான் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதாக நான் சொல்லவில்லை. சம்பவத்திற்கு பின்பு சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து ஆஜர் 12ம் எதிரியை என்னிடம் 3 முறை அடையாளம் காண்பித்தார்கள் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில்உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது திருடபட்ட பொருட்களை அதன்பின்பு பார்த்தேனா என்றால் நான் அலுவலகத்தில் வைத்து பார்த்தபோது அங்கு காப்பர் வாகனத்தில் தான் இருந்தது. Sterlight கம்பெனியிலிரந்து Scrap வெளியே எடுத்து செல்வார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. Sterlight கம்பெனியிலிருந்து எடுத்து செல்லும் பொருட்கள் வெவ்வேறு மாநிலங்களில் திருடபட்டு அது சம்பந்தமாக வழக்கு உள்ளது என்பது எனக்கு தெரியாது. சித்திவிநாயாக ராஜீஸ்டிக் கம்பெனியில் நிர்வாக மேலாளர் யார் என்று எனக்கு தெரியாது. எங்கள் கம்பெனியில் 700 வாகனங்கள் உள்ளது என்றால் சரியல்ல. அதைவிட அதிக வாகனங்கள் உள்ளது. சிபிசிஐடி அலுவலகத்திற்கு போவதற்கு பின்பு வேறு காவல்நிலையம் சென்றேனா என்றால் சென்றேன். ஆனால் எந்த காவல்நிலையம் என்று எனக்கு தெரியவில்லை. நான் சென்ற காவல்நிலையத்தில் போலிசார் சீருடையில் இருந்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லபடும் நாளில் என்னுடன் 3 மற்றும் 4 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. வாகனத்தை மாற்றி ஓட்டுவதற்கு என்னுடன் 3 மற்றும் 4 நபர்கள் இருந்தார்கள் என்றால் சரியல்ல. வாகனம் மற்றும் வாகனத்தில் இருக்க கூடிய பொருட்கள் எனக்கு தெரிந்த நபர்களால் எடுத்து செல்லபட்டது என்றால் சரியல்ல. வாகனம் கிடைத்தவுடன் மாட்டி கொள்வாமா என்ற பயத்தில் சுபாஷ் உடன் சேர்ந்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விததத்தில்எந்த சம்பவமும் நடக்கவில்லையென்றாலும், நான் வழக்கிற்காக நீதிமன்றத்தில் புதிய விபரங்களை பொய் சாட்சியாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சித்திவிநாயாக லாஜீஸ்டிக் கம்பெனியின் கிளைகள் சூரத் , சென்னை மற்றும் தூத்துகுடி வாப்பி , ஆகிய இடங்களில் உள்ளது. பொதுவாக, பம்பாய், பெங்களூர் பூனா, சர்தார்

என்ற பாதை வழியாக வருவேன். தூத்துகுடியிலிருந்து குஜாரத்திற்கு மதுரை, சேலம், சித்திரைகுப்தா, பெங்களூர், பூனே , பம்பாய், வழியாக செல்வேன். சேலத்தில் இருந்து மறுபடியும் மதுரை போவதற்கு யார் சொல்லி போனேன் என்றால் நான் அவ்வாறு போகவில்லை. சென்னை செல்வதற்கான அவசியம் எதுவும் இல்லையென்றால் சரிதான். சென்னையில் யாரையும் தெரிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லையென்றால் சரியல்ல. அலுவலகத்தில் இருப்பவர்களை தெரியும்.தூத்துகுடியிலீரந்து லோடு எடுப்பதற்காக சென்னை அலுவலகத்தில் இருந்து உத்தரவு வரவேண்டுமென்பதால் சென்னை அலுவலகத்தில் இருப்பவர்களை எனக்கு தெரியும். தற்போது சென்னை அலுவலகத்தின் எண் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த கால கட்டத்தில் பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு போன் செய்வதால் எண்கள் நினைவு இருந்தது. 6.9.2014ந் தேதியன்று ராயலா நகர் காவல்நிலையத்திற்கு சென்றேனா என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் தவறு செய்துவிட்டு எதிரிகள் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

1,2, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையில் வேறு தேதிக்கு மாற்றும்படி மனு அளிக்கபட்டது. இருப்பினும், வழக்கின் விசாரணை 28.6,2019ந் தேதியன்றே இன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கபட்ட காரணத்தினாலும், மனுவில் கூறிய காரணங்கள் போதுமானவையல்ல என்ற காரணத்தினாலும், மனு நிராகரிக்கப்பட்டது.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 3

Court I Additional District Court, Tiruvallur.

Name : Tmt. Saraswathi
Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 01 st day of August 2019.

**01/08/2019.**

**S.C.No.228/2018** **PW** 3 Tmt. Saraswathi

**முதல் விசாரணை**

நான் சென்னை பல்கலைகழக்கத்தில் இந்தி துறையில் 2005 லிருந்து விரிவுரையாளர் ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்தி மொழியில் MA .,MPhil., PhD படித்துள்ளேன். என் தாய் மொழியாகும். 24.11.2014ந் தேதியன்று மொழிபெயர்ப்பாளர் வேண்டுமென்று கேட்டு என்னை துறையின் University Registrar க்கு கடிதம் அனுப்பினார்கள். பதிவாளர் அவர்கள் என்னை நியமனம் செய்து அனுப்பி வைத்தார். 25.11.2014ந் தேதியன்று அம்பத்தூர் நீதிமன்றத்தில் ஆஜராகி, நீதிபதி மகேஸ்வரி என்பவர் முன்னிலையில் ஆஜரானேன். மதியம் 1.00 மணிக்கு வர சொன்னார்கள். மதியம் 1.00 லிருந்து 3.30 மணி வரை வழக்கு சம்பந்தபட்ட சவுதலிகான் என்பவர் இந்தியில் கூறிய விபரங்களை நீதிபதி முன்பாக தமிழில் மொழிபெயர்த்து சொன்னேன். நீதிபதி அவர்கள் கேட்ட கேள்விகளை இந்தியில் மொழிபெயர்த்து மேற்படி நபரிடம் சொன்னேன். நான் சொல்ல சொல்ல நீதிமன்ற அலுவலர் டைப் செய்தார்கள். மொத்தம் 8 பக்கம் இருந்தது. அதில் எட்டு பக்கத்திலும் மொழிபெயர்ப்பாளர் என்ற முறையில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கபடும் ஆவணம் அசாஆ 3 வரிசையாகும். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ3, எ4, எ7, எ9 முதல் எ12 எதிரிகள் வரை குறுக்கு விசாரணை**

எங்கள் பல்கலைகழக பதிவாளருக்கு சிபிசிஐடி லிருந்து கடிதம் வந்தது என்றால் சரிதான். கொடுக்கபட்ட வேண்டுகோள் கடிதத்திலேயே என் பெயரை எழுதி பதிவாளர் கையொப்பம் செய்துள்ளார் அதை தவிரவேற எழுத்து பூர்வமான அதிகாரம் எதுவும் கொடுக்கவில்லை.

அந்த கடிதம் என்னிடம் தான் உள்ளது. நீதிமன்றத்தில் இருக்கும் ஆவணத்தில் உள்ள கையொப்பம சிபிசிஐடி அலுவலகத்தில் வைத்து போடபட்டது என்றால் சரியல்ல. கையொப்பம் செய்தபின்பு சிபிசிஐடி அலுவலகத்தில் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. சாட்சி விசாரித்தாகவும், வாக்குமூலம் ஏதேனும் பதிவு செய்தார்களா என்று சொல்கிறார்.

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, AT TIRUVALLUR**

**SESSIONS CASE NO. 228/2018**

Deposition of Witness for Prosecution

Defence PW 4

Court I Additional District Court, Tiruvallur.

Name : Thiru.GANPATH LALVANI

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day 02 st day of August 2019.

**02/08/2019.**

**S.C.No.228/2018** **PW 4** Thiru.GANPATH LALVANI

**முதல் விசாரணை**

நான் சென்னையில் குடியிருக்கிறேன். நான் சித்தி வினாயாக கம்பெனியில் டிவிசினல் மேனேஜராக பணிபுரிந்தேன். தற்போது கம்பெனி மூடப்பட்டது. சித்தி வினாயாக கம்பெனியில் வேலை செய்யும் போது எங்களுடைய ஏரிய மேனேஜர் சுபாஸ் மாலா 03.09.2014 இரவு 11.00 மணிக்கு எனக்கு ஏரியா மேனேஜர் சுபாஸ் மாலா போன் செய்தார். ஒரு வண்டி டாடா டிரெய்லர் வண்டி தூத்துக்குடியில் இருந்து லோடாகி சோசா ஸ்டெர்லைட் சில்வாசா குஜராத்திற்கு சென்றதாகவும் அந்த வண்டியில் ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்றும் சொன்னார். அந்த வண்டியின் எண். எம்.எச்.04 எப் யூ 6952 ஆகும். அந்த வண்டிக்கு ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்று சொன்னார்கள். நான் மறுநாள் போன் செய்து கேட்கலாம் என்று சொன்னேன். பின்பு மறுநாள் லேட் நைட் போன் செய்து டிரைவர் மொபைலை எடுக்கவில்லை என்றும் வண்டி கடத்தப்பட்டது என்றும் சொன்னார். டிரைவர் மாற்றிவிட்டு வண்டியை எடுத்து சென்றுவிட்டார்கள் என்று சொன்னார். வண்டி எஸ்.ஆர்.எம். போலிஸ் ராமாபுரம் அருகில் இருப்பதாக சொன்னார்கள். அந்த இடத்தில் இருப்பது ஜிபிஎஸ் மூலம் தெரிந்தது. விடியற்காலை 07.00 மணியளிவல் வள்ளுவர் சாலை அருகே சென்று பார்த்தபோது ஒரு scrap yardல் வண்டி இருந்தது. நாங்கள் வேறு ஏதும் கேட்காமல் காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். அது ராயலா நகர் காவல் நிலையம். அந்த வண்டியில் காப்பர் 24 டன் இருந்தது,. அதன் மதிப்பு ரூபாய் 1 கோடியே 20 லட்சம் ஆகும். என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**6 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

காப்பர் பொருட்களுக்கான மதிப்பிற்கான பில் ஏதும் போலிசாரிடம் கொடுத்தேன். அதில் இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் குறிப்பிட்ட டிரைலர் லாரியின் ஜிபிஎஸ் பொருத்தப்பட்டதற்கான பில் ஏதும் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பணிபுரியும் கம்பெனி லாரியின் உரிமையாளர் ஆகும். பொருட்களின் உரிமையாளர் அல்ல. ஸ்டெர்லைட் கம்பெனி காப்பர் பொருட்களின் உரிமையாளர். டிரைலர் வாகனத்தின் பதிவு சான்றிதழ் காவல் நிலையத்தில் கொடுத்திருக்கிறேன். அது இன்று நீதிமன்றத்தில் எனக்கு காண்பிக்கப்படவில்லை. மகாராஸ்டிராவில் பதிவு செய்யப்பட்ட வாகனம் என்பதால் மகாராஸ்டிரா ஆர்.டி.ஓ விடம் வாகனத்தின் பதிவை உறுதி செய்யும் வகையில் ஆவணங்கள் ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து சென்னை வருவதற்கு எத்தனை டோல்கேட்டை தாண்டி வரவேண்டும் என்பது எனக்கு தெரியாது. போலிசார் என்னிடம் வாகனம் குறிப்பிட்ட டோல்கேட்டினை தாண்டி வருவதற்கான ரசீதோ அல்லது சிசிடிவி புட்டோஜோ காண்பித்தார்களா என்றால் இல்லை. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து வெளியே வாகனம் எடுத்து வந்ததற்கான அவுட் கேட் பாஸ் என்னிடம் காண்பித்தர்களா என்று எனக்கு நியாபகம் இல்லை, நிதிமன்றத்தில் அவ்வாறு ஆவணம் ஏதும் காண்பிக்கப்படவில்லை. வாகனத்தின் டிரிப் சீட் என்னிடம் காண்பிக்கப்படவில்லை. டிரிப் சீட் இல்லாமல் வாகனத்தை எடுக்க முடியாது என்றால் சரிதான், டிரிப் சீட் ஓட்டுநரிடம் இருக்கும். வள்ளுவர் சாலையில் எஸ்ஆர்எம் காவல் நிலையம் அருகில் ஸ்கேர்ப் வாகனம் இருந்தது அதில் எந்த scarp yard என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. ஜிபிஎஸ் மூலம் வாகனம் காண்பிக்கும் பொருட்டு அதன் சாப்ட்வேர் காபி போலிசாரிடம் கொடுத்தேன் அதை நீதிமன்றத்தில் காண்பிக்கவில்லை. வாகனத்தின் காப்பீடு விபரங்கள் எனக்கு தெரியாது. ஸ்டெர்லைட் கம்பெனியில் இருந்து எந்த சரக்கையும் எங்கள் வாகனத்தில் ஏற்கவில்லை என்றாலும் காப்பீடு மோசடி செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வண்டியில் சொன்ன இடத்தில் பார்த்ததாக உண்மைக்கு புறம்பாக போலிசார் சொன்னதின் பேரில் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

**3,4,7மற்றும் 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும் ஆ.சா.1 சுபாஸ் என்பவரும் கம்பெனியின் மேலாளர்களாக இருந்தோம் என்றால் சரிதான். முதன் முதலில் வண்டி காணமால் போன விபரத்தை சுபாஸ்

என்னிடம் சொன்னார். சுபாஸ் என்பவர் செல்லும் வரை வண்டியின் நிலவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். குஜராத்தில் இருந்து தூத்துக்குடி சென்ற வண்டியில் ஜிபிஎஸ் வழித்தடம் குறித்த விபரங்கள் எனக்கு தெரியாது. 03ம் தேதியில் இருந்து வண்டியின் ஜிபிஎஸ் எப்போதிலிருந்து செயல்படவில்லை என்றும் எவ்வளவு மணி நேரம் செயல்படவில்லை என்று போலிஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை, சுபாஸ் என்பவர் சொல்லி தான் வண்டி ராமாபுரத்தில் இருப்பது தெரிந்து கொண்டோன். 03ம் தேதி க்கு மேல் ஜிபிஎஸ் வேலை செய்யவில்லை என்று நான் கூறியிருந்தால் அது சரியல்ல. வண்டியின் ஜிபிஎஸ் கண்காணிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. சுபாஸ் என்னிடத்தில் கூறிய விபரத்தை தான் நான் போலிசாரிடம் சொன்னேன் என்றால் சரிதான். வண்டியை பார்த்ததையும் போலிஸ் விசாரனையில் சொன்னேன் என்று சாட்சி முன் வந்து கூறுகிறார். ஓட்டுநர் சவுகத்அலி கான் என்பரை சம்பவத்திற்கு பின்பு ஒரு மாதம் கழித்து அலுவலகத்தில் வைத்து பார்த்தேன். காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு நானும் சுபாஸ், மகாலால் மட்டும தான் போயிருந்தோம். எனக்கு தமிழ் எழுத தெரியாது ஓரளவுக்கு படிக்க தெரியும். இந்த வழக்கை பற்றி எனக்கு ஓன்றும் தெரியாது என்றாலும் போலிசார் கூறியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>10 மற்றும் 12 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

3, 4, 7 மற்றும் 11 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

03ம் தேதிக்கு முன்பாக ஓட்டுநர் சவுகத் அலிகானை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். மாதாவரம் சித்தி விநாயகா கம்பெனியில் சுமார் 4, 5 பேர் வேலை செய்கிறார்கள். 05ம் தேதி எத்தனை மணிக்கு வாகனத்தை சென்று வாகனத்தை பார்த்தேன் என்றால் காலை 07.00 மணிக்கு சென்று பார்த்தேன். ராய்லா நகர் காவல் நிலையத்திற்கு 07.30 மணிக்கு சென்றிருப்பேன். நானும் சுபாஸ் மட்டும் தான் காவல் நிலையம் போனேம் எங்களுடம் வேறு யாரும் வரவில்லை. இந்த வழக்கை சம்மந்தமாக சிபிசிஐடி போலிசார் என்னை விசாரித்தார்கள். 20 நாட்களுக்கு பின்பு 25ம் தேதி விசாரித்தார்கள். என்னிடம் கையெழுத்து ஏதும் வாங்கவில்லை.

என்னை வாய் மொழியாக விசாரித்தார்கள். மாதாவரம் அலுவலகத்திற்கு ராயல் நகர் காவலர்களோ, சிபிசிஐடி போலிசாரோ நேரடியாக சென்று விசாரனை செய்தார்களா என்று எனக்கு தெரியாது. நான் சூலையில் இருக்கும் அலுவலகத்தில் தான் இருப்பேன். சுபாஸ் என்பவருக்கு எத்தனை மணிக்கு வண்டி இருக்கும் இடம் தெரியவந்தது என்பது எனக்கு தெரியாது. அந்த விபரத்தை அவர் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்த பின்பு எத்தனை மணிக்கு வாகனம் காவல் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டது என்பது எனக்கு தெரியாது. வாகனத்தில் ஏற்றப்பட்டுள்ள பொருட்களின் விபரம் பற்றி எனக்கு சம்பவத்திற்கு முன்பாகவே தெரியும். 03ம் தேதி இரவு அன்று வண்டியில் ஏற்றப்பட்ட பொருட்களின் விபரம் தெரியவந்தது, அதை போலிசாரிடம் சொன்னேன். நான் சொல்வது பொய் என்றாலும் எந்த விபரமும் போலிசாரிடம் சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது என்றாலும் கம்பெனியில் கூறியவாறு நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**<u>1 மற்றும் 5ம் தரப்பு வழக்கு எதிரிகள் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு விசாரணைக்கு தேதி குறிப்பிட்டு ஒத்தி வைக்கப்பட்ட போதிலும் 1 மற்றும் 5ம் எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எதிரிகளுக்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் முன் வரவில்லை.

Sd/-Deepthi Arivunithi

Taken to my dictation and corrected
by me to open court read over to the witness
and admitted by him as correct.

Sd/-Deepthi Arivunithi
I Addl.Dist.Judge,
I Additional District court,
Tiruvallur.